# பேருவளை பிரதேச சபை

# களுத்துறை மாவட்டம்

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 யூலை 01 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 29 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் பொருட்டு 88034064 ஆம் கணக்கு இலக்கத்தையுடைய நிலையான வைப்பிற்கான வட்டி ரூபா 31,068 ஆகும். இது கணக்கிலிடப்படாமையால், ஆண்டிற்கான வட்டி வருவாயும் பெற வேண்டிய வருவாயும் முறையே ஒவ்வொன்றும் ரூபா 31,068 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணக் கணக்கிலிடப்பட வேண்டிய ரூபா 37,500 பெறுமதியான ஞாபகார்த்தப் பலகைகள் இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் கணக்கிலிடப்படாதிருந்தன.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 209,903,285 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 37,319,213 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 10,418,071 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேறுகளில் ரூபா 26,901,142 அதிகரிப்பு தென்பட்டது.

வருவாயில் ரூபா 39,269,847 அதிகரிப்பும் செலவில் ரூபா 12,368,705 அதிகரிப்பும் நிதிப்பெறுபேற்றின் ரூபா 26,901,142 அதிகரிப்பிற்கான பிரதான காரணிகளாகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

எந்தவொரு வங்கிக் கணக்கிலிருந்தும் மேலதிகப் பற்றுப் பெறுவதானது தடைசெய்யப்பட்டுள்ளபோதும், அதற்கொப்ப நடவாமையால் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் 2757387 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் ரூபா 1,035,605 மேலதிகப்பற்று நிலவியது. இதன் பொருட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 25,566 மற்றும் முன்னைய ஆண்டின் பொருட்டு ரூபா 21,655 என மேலதிகப்பற்று வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய் உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 16,090 | 10,262 | 13,161 |
| (ii) | குத்தகை வாடகை | 15,714 | 14,345 | 3,599 |
| (iii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 2,473 | 2,473 | - |
| (iv) | ஏனைய வருவாய் | 159 | 157 | 02 |

### 2.3.2 தீர்வையும் வரியும்

(அ) 2015 மற்றும் அதற்கு முன்பிருந்தே நிலவி வரும் தீர்வைவரி நிலுவை ரூபா 14,099,099 ஆகும். மீளாய்வாண்டின்போது அதில் அறவிடப்பட்டிருந்தது ரூபா 5,795,005 அல்லது 41 சதவீதம் மாத்திரமே.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 12,032,043 விலைப்பட்டியலிடப்பட்டு அறவிடப்பட்டிருந்த தொகை அதில் 64 சதவீத்தைக் குறிக்கும் ரூபா 7,709,507 மாத்திரமே.

(இ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,626,630 ஆகவிருந்த தீர்வை வரி நிலுவையில் 01 முதல் 03 ஆண்டுகளாக 4190 கூறுகளிலிருந்து ரூபா 3,487,907 , 03 முதல் 05 ஆண்டுகளாக 2388 கூறுகளிலிருந்து ரூபா 3,124,342 , 5 முதல் 10 ஆண்டுகளாக 2813 கூறுகளிலிருந்து ரூபா 4,018,877 10 ஆண்டுகளுக்கு மேலாக 1105 கூறுகளிலிருந்து ரூபா 1,356,011 என்பன உள்ளடங்கியிருந்தன. இவற்றை அறவிடுவதற்குச் சபை முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ஈ) தீர்வை வரி நிலுவைகளை அறவிடுவதற்குச் சபை நிலையான திட்டங்களைத் தயாரிக்காததுடன் வரி நிலுவையை அறவிடுவதற்கு எச்சரிக்கைக் கடிதங்களை தர்கா நகர் உப அலுவலகம் மாத்திரமே வழங்கியிருந்தது.

**2.3.3 தொலைத் தொடர்புக் கோபுரங்களிலிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடுதல்**

பயாகம உப அலுவலகம் 08 தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்கு 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 24,000 அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிட்டிருக்கவில்லை.

**2.3.4 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 31,830,011 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 50,509,153 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு / முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

(அ) வாசகர்கள் திருப்பி அளிக்காத நூலகப் புத்தகங்கள்

சபை நடாத்தும் நூலகங்களில் வெளியே எடுத்துச் செல்வதற்குப் புத்தகங்களை வழங்கும் பிரிவால் வாசகர்கள் எடுத்துச் சென்று 2017 பெப்ரவரி 03 ஆந் திகதியளவிலும் திருப்பி அளிக்காதிருந்த 215 புத்தகங்களது பெறுமதி ரூபா 29,097 ஆகும். இப்புத்தகங்கள் 2015 யூன் மாதத்திற்கு முன்னர் எடுத்துச் செல்லப்பட்டனவாகும்.

(ஆ) பொதுமக்களது புகார்கள் (அலுத்கம உப அலுவலகம்)

(i) சுகாதாரப் பிரச்சினைக்களுக்கென பொதுமக்கள் புகார் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட புகார்கள் 5 மாத்திரமே. அப்புகார்கள் சுகாதாரப் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், அவை தொடர்பான செயல் முன்னேற்றம் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(ii) மின்சாரம் தொடர்பான புகார்களுக்கெனப் பொது மக்கள் பதிவேடு ஒன்று இருந்தபோதும், புகார்கள் பதிவு செய்யப்பட்டமை மாத்திரமே பதிவாகி, செயல்முன்னேற்றம் பதிவு செய்யப்படாதிருந்தது.

(iii) பொதுவான புகார்களுக்கென பிறிதாக ஒரு பதிவேடு பேணப்படாததுடன், பேணப்பட்ட பதிவேட்டில் தலைமை அலுவலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட சகல கடிதங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(இ) வாகனக் கட்டுப்பாடு

----------------------------------

(i) சபைக்குரிய டிறக்டர் தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாததுடன், அந்த டிறக்டர் எங்குள்ளது என்பதைக் காட்டுவதற்குச் சபை தவறியிருந்தது.

(ii) சபைக்குரிய குறூ கெப் வண்டிக்குரிய சம்பவப் பதிவேட்டை பரிசீலித்தபோது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- வாகனத்தின் எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்பட்டிருக்கவில்லை.
- வருடாந்த அனுமதிப் பத்திரமும் கருவிகளும் ஏனைய மேலதிக உபகரணங்களும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.
- பழுதுபார்த்தல் விபரம் இருக்கவில்லை.

(iii) வாகனங்களது சம்பவப் பதிவேடுகளது தெரிவுச் செவ்வையின்படி, அநேக சம்பவப் பதிவேடுகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை, அந்த சம்பவப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட வேண்டிய வாகன விபரம், எரிபொருள் நுகர்வின் அளவு, பழுதுபார்த்தல் நடவடிக்கைகள், டயர், டியூப் பொருத்தப்படுதல், வாகனங்களைக் கழுவுதல் அடங்கலான ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாத சந்தர்ப்பங்கள் நிலவின.

(ஈ) சுற்றுலா அபிவிருத்தி வரி

----------------------------------------------

(i) சுற்றுலா அபிவிருத்தி வரியை அறவிடுகையில் 06 நிறுவனங்களில், ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு நிறுவனம் ஒன்றினால் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின் அடிப்படை பின்பற்றப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) லங்கா பிரின்சஸ் ஹோட்டல் 2014 ஆம் ஆண்டின் சனவரி முதல் யூன் வரையான மாதாந்த வருவாயில் ஒரு சதவீத அபிவிருத்தி வரியாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குக் கொடுப்பனவு செய்த தொகை ரூபா 3,798,665 ஆகும். எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டின் பொருட்டு சபைக்கு ஒரு சதவீத வரியாக ரூபா 98,805 மாத்திரமே கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 95,382 மாத்திரமே.

(iii) லலுனா ஹோட்டலின் 2013/2014 இறுதிக் கணக்குகளின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்கென அறவிடப்பட வேண்டிய ஒரு சதவீத வரி ரூபா 140,852 ஆகும். எவ்வாறாயினும், அறவிடப்பட்டது ரூபா 49,257 ஆகையால் ரூபா 91,365 குறைவாக அறவிடப்பட்டிருந்தது. 2014/2015 நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் பொருட்டு அறவிடப்பட வேண்டிய வரி ரூபா 182,500 ஆகுமெனினும், ரூபா 69,330 அறவிடப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 113,190 குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(iv) சினமன் பே ஹோட்டலது 2016 ஆம் ஆண்டிற்கான ஒரு சதவீத வரியை அறவிடுகையில் உணவு விற்பனை மாத்திரமே அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது.

(உ) கடைகளைக் குத்தகைக்கு வழங்குதல்

---------------------------------------------------------------------

சபைக்குரிய அலுத்கம பொது வர்த்தகர் கூட்டுத் தொகுதியின் 27 கடைகளில் வருவாய் எதுவும் ஈட்டப்படாது 15 ஆண்டுகளாக வெறுமனே இருந்தன.

(ஊ) முத்திரைக் கட்டணம்

-----------------------------------------

காணிப் பதிவாளர் அலுவலகங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் அறவிடப்படுவதில் தாமதம் நிலவியது.

(எ) தனி நபர் கோரிக்கைகளுக்கு உபகரணங்களை வழங்குதல்

-----------------------------------------------------------------------------------------------

தனி நபர் கோரிக்கைகளின் பிரகாரம் (தேவையைச் சரிவரக் குறிப்பிட்டும் / குறிப்பிடாதும்) நீர் நிரப்பிய தாங்கிகளும் நாற்காலிகளும் பெருமளவில்

வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் நிலவியதுடன், அச்சந்தர்ப்பங்களின்போது முறையான அங்கீகாரமின்மை, பதிவு செய்யப்படாமை, திருப்பி வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் என்பன அவதானிக்கப்பட்டன.

(ஏ) வாரச் சந்தை நடைபெறும் இடங்களில் கடைகளை நிர்மாணித்தல்

---

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினது நிதி உதவியுடன் 2013 ஆம் ஆண்டின்போது வாரச் சந்தை நடைபெறும் இடத்தில் உள்ள கடைகள் தகர்க்கப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னர் கடைகள் இருந்த சந்தர்ப்பத்திலும் 7 கடைகள் மாத்திரமே திறந்தவாறிருந்தன.

(ii) 2017 பெப்ரவரி 03 ஆந் திகதியளவில் 05 கடைகள் மாத்திரமே திறக்கப்பட்டிருந்தன.

(iii) இக்கடைகள் யாவற்றிலிமிருந்து வாடகை அறவிடப்படாமை அவதானிக்கப்பட்டது.

(iv) கழிவறை வசதிகள் முறையாக இருக்கவில்லை.

(v) தெருவை நோக்கியவாறு பயனளிக்கும் விதத்தில் கடைகள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ஏல விற்பனைக் காணிகள்

---

(i) புலுகஹலந்த எஸ்டேட் எனும் இடம் துண்டுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட காணியில் பொது நடவடிக்கைகளுக்காகச் சபைக்குரிய 1 ஏக்கர், 22 பர்ச்சஸ் காணியானது பொது நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட முடியாத தாழ் நிலமாக இருந்தது.

(ii) பின்வரும் காணி ஏல விற்பனைகளின்போது சபைக்குக் கிடைக்கப்பெற்ற காணிகளில் சபையின் உரித்தை அறிவிக்கும் பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

| **காணி** | **ஏலவிற்பனையாளர்** |
|---|---|
| 243/2016 ஆம் இலக்க நில அளவை - புலுகஹவத்த எஸ்டேட் | வைஸ் புரொபட்டி சொலூசன் நிறுவனம் |

| | |
|---|---|
| 6702 ஆம் இலக்க நில அளவை - புலுகஹவத்த எஸ்டேட் | பிரைம் லேன்ட் பிரத்தியேக கம்பனி |

(iii) பின்வரும் காணி ஏல விற்பனைகளின்போது சபைக்குக் கிடைக்கப் பெற்ற காணித் துண்டுகளில் தூண்கள் அமைக்கப்பட்டு வெவ்வேறாக்கப்பட்டிருக்கவில்லை.

| **காணி** | **ஏலவிற்பனையாளர்** |
|---|---|
| 243/2016 ஆம் இலக்க நில அளவை - புலுகஹவத்த எஸ்டேட் | வைஸ் புரொபட்டி சொலூாசன் நிறுவனம் |
| 6702 ஆம் இலக்க நில அளவைபுலுகஹவத்த எஸ்டேட் | பிரைம் லேன்ட் பிரத்தியேக கம்பனி |

## 3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

2006 ஆம் ஆண்டின்போது பெறப்பட்ட தார் உருக்கும் இயந்திரம் பெறப்பட்ட நாளிலிருந்து எதுவிதத்திலும் பயன்படுத்தப்படாது இற்றைவரை வெறுமனே இருந்ததுடன், அதன் பொருட்டு ரூபா 869,500 முற்பணமாக மாத்திரம் 2006 செப்டம்பர் 22 ஆந் திகதியன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பேருவளை பிரதேச சபைக்குச் சொந்தமான காலி வீதி 290 ஆம் இலக்கக் கட்டிடத்தைக் குத்தகைக்கு வழங்குவது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொருட் கொள்வனவு வழிகாட்டியிலிருந்து விலகியவாறு, சபையினது தீர்மானத்தின் அடிப்படையில், மாதாந்தம் ரூபா 30,000 வீதம் கட்டிடம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக, அவ்விடத்தே உள்ள ஏனைய கடைகளுடன் ஒப்பிடுகையில் போட்டியுடனான கூறு விலைகளைக் கோருவதன் மூலம் சபை சாதகமான அதி கூடிய குத்தகை வாடகையைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் இழப்பிற்குள்ளானது.

(ஆ) முதற் தடவையாக 2011 டிசெம்பர் 01 முதல் 2013 டிசெம்பர் 03 வரையான 02 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், பின்னர்

வருவாய்ப் பரிசோதகரது மதிப்பீட்டு அறிக்கையினடிப்படையில் மாதாந்த குத்தகை வாடகை ரூபா 33,000 வீதம் 03 ஆண்டுகளுக்கு அதே குத்தகையாளருக்கு அதனைக் குத்தகை வழங்குவதற்குத் தலைவர் அங்கீகாரமளித்திருந்தார். இதன் பொருட்டு சபை தீர்மானமெதனையுமம் மேற்கொள்ளவில்லை.

(இ) குத்தகைக் காலம் 2016 டிசெம்பர் 01 அன்று முடிவடைவதால் புதினப் பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் மீண்டும் குத்தகைக்கு வழங்கப்படுவதற்கான கேள்விகள் கோரப்பட்டிருந்தன. அதற்கமைய, ஆயுர்வேதக் கூட்டுத்தாபனம் ரூபா 60,000 வீதம் கொடுப்பனவு செய்து குத்தகையைப் பெறுவதற்கு இணங்கியிருந்தபோதும், முன்னைய குத்தகையாளர் 2017 பெப்ரவரி மாதத்திலேனும் கட்டிடத்தைத் திருப்பி அளிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

பேருவளை பிரதேச சபைக்குரிய மக்கொன - குமாரகந்த வீதியில், முங்ஹேன வீதி ஆரம்பிக்குமிடத்திலிருந்து ஏறக்குறைய 150 மீட்டர் பழுதடைந்திருந்தது. அவ்வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளைச் சபை மேற்கொள்ளவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருவாய் நிர்வாகம்

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வாகனக் கட்டுப்பாடு

(ஈ) உள்ளகக் கணக்காய்வு